# ஒன்ஹப் சென்னையின் சுகாதார திட்டம்




**சென்னை, செப் 16:**

**ஒன்ஹப் சென்னை என்ற சுகாதார அமைப்பு , சென்னையில் தொழிற்நகரமைப்பு உருவாகிவரும் இடத்தில் இம்மாதம் ஹெல்த் ஹெப் என்ற சுகாதார தொண்டு முயற்சியை தொடங்கியுள்ளது.**

தொழிற் நகரமைப்பான ஒன்ஹப் சென்னையானது, பழைய மகாபலிபுரம் சாலையில் உருவாகி வரும் தொழிற் நகரமைப்பைச் சுற்றியுள்ள அண்டைப்பகுதியில் ஒரு சுகாதார நலப்பணியை தொடங்கியுள்ளது. ஒன்ஹப் சென்னையின் ஒரு சமுதாயத் தொண்டு முயற்சியான ஹெல்த்ஹப் என்பது குண்ணப்பட்டு, பையனூர், அமூர் மற்றம் பஞ்சன் திருத்தி ஆகிய நான்கு கிராமங்களுக்கு முதனிலை பரிசோதனைகளை நீட்டிக்கும். ஓராண்டு வரை நடக்கவுள்ள இந்த முகாமில் இலவசமாக தரமான மருத்துவ சிகிச்சையை பெறுவதன் மூலம் 700 க்கும் மேற்பட்ட கிராமவாசிகள் பயனடைவார்கள்.

முறைப்படி கிராமங்களில் நடைபெறும் இந்த வாராந்திர முகாம்களில் டாக்டர்கள் ஆய்வு செய்து, நோய் எதுவும் இருக்குமானல் கண்டறிந்து அவற்றிற்கு தேவையான சிகிச்சையை பரிந்துரை செய்வார்கள்.

அசெண்டாஸ் இந்திய ஆபரேன்ஸ், தலைமை செயல் அதிகாரி லீஃபூ நியாப் மற்றும் ஐஆர்ஈஓ இயக்குனர் ரமேஷ் அவதனா ஆதரவின்பேரில், நாடாளுமன்ற உறுப்பினர் கே.மரகதம், சட்டமன்ற உறுப்பினர் கே.மனோகரன் மற்றும் நான்கு கிராமங்களின் தலைவர்கள் முன்னிலையில், ஒன்ஹப் சென்னை தொழிற்நகரமைப்பு உருவாகி வரும் இடத்தில் செப்டம்பர் 10 அன்று ஹெல்த் ஹப் என்ற சுகாதார தொண்டு முயற்சி தொடங்கப்பட்டது.